
தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 90 | 4 Pages | 29.10.2024 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 90 | 4 பக்கங்கள் | 29.10.2024 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**மறத்தல் வெகுளியை யார்மாட்டுந் தீய**
**பிறத்தல் அதனான் வரும்**

**விளக்கம்:**
யாரிடத்திலும் சினம் கொள்ளாமல் அதை மறந்து விட வேண்டும், தீமையான விளைவுகள் அச் சினத்தாலேயே ஏற்படும்.

# இதுதான் நிஜம்.. எக்ஸ் ஆபீசுக்குள் தண்ணீர் சிங்க் உடன் நுழையும் மஸ்க் வீடியோ மீண்டும் வைரல்



எலான் மஸ்க், அக். 29

எலான் மஸ்க் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் பிரபல சமூக ஊடகமான ட்விட்டரை 44 பில்லியன் டாலர் விலைக்கு வாங்கினார். அதோடு பணிநீக்கம் செய்வது என அந்நிறுவனத்தில் பல மாற்றங்களை கொண்டுவந்தார். ட்விட்டருக்கு எக்ஸ் என்ற பெயர் மாற்றம் செய்யப்பட்டதும் அதில் அடக்கம்.

இந்நிலையில் கடந்த 2 வருடங்களுக்கு முன்னர் இதே நாளில் கையில் தண்ணீர் சிங்க் உடன்தான் ட்விட்டர் அலுவலகத்திற்குள் முதன்முறையாக நுழைந்த புகைடபத்தை பதிவிட்டு "Let that sink in!". இதை ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும் என்று பொருள்படும்படி தற்போது பதிவிட்டுள்ளார்.

நிறுவனத்தின் சிஇஓ பராக் அகர்வால், தலைமை அதிகாரி விஜய காதே உட்பட முக்கிய பிரமுகர்களை டிவிட்டரில் இருந்து நீக்கம் செய்ததை ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும் என்று பொருள்படும்படி அவர் அப்போது சிங்க் உடன் வந்தது குறிப்பிடத்தக்கது.

# தேர்தலில் கமலா ஹாரிஸ்க்குதான் ஆதரவு.. வீடியோ வெளியிட்டு டிரம்பை கிழித்தெடுத்த டைட்டானிக் நாயகன்



அமெரிக்கா, அக். 29

உலக வல்லரசான அமெரிக்காவின் அடுத்த அதிபரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்த்தலுக்கு இன்னும் 10 நாட்களே உள்ளன. உக்ரைன் போர், பாலஸ்தீன போர்களுக்கு வரும் நவம்பர் 5 ஆம் தேதி நடக்க உள்ள வாக்குப் பதிவு உலக அரசியலுக்கே முக்கியமானதாகப் பார்க்கப்படுகிறது.

ஆளும் ஜனநாயக கட்சி சார்பில் தற்போதைய துணை அதிபர் கமலா ஹாரிஸ் போட்டியிடுகிறார். குடியரசுக் கட்சி சார்பில் முன்னாள் அதிபர் டொனல்டு டிரம்ப் போட்டியிடுகிறார். இரு தரப்புக்கும் பிரபலங்கள் தங்களின் ஆதரவைத் தெரிவித்து வருகின்றனர். டிரம்ப் பக்கம் தொழிலதிபர் எலான் மஸ்க் தீவிரமாக செயல்பட்டு வருகிறார். கமலா ஹாரிஸுக்கு பாடகி டெய்லர் ஷிப்ட் ஆகியோர் தங்கள் ஆதரவை தெரிவித்தனர். ஆனாலும் சமீபத்தில் வெளியான கருத்துக்கணிப்பின்படி கமலா சற்று பின்தங்கியுள்ளார்.

இந்நிலையில் ஆஸ்கார் விருது வென்ற டைட்டானிக் பட நாயகன், ஹாலிவுட் முன்னணி நடிகர் லியோனார்டோ டி காப்ரியோ கமலா ஹாரிஸுக்கு தனது ஆதரவை தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக தனது அதிகாரப்பூர்வ இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வீடியோ பதிவை வெளியிட்டுள்ளார். அதில் பேசும் அவர், இந்த மாத தொடக்கத்தில் ப்ளோரிடா, ஜார்ஜியா, வட கரோலினா பகுதிகளில் ஹெலன் மற்றும் மில்டன் சூறாவளியால் அதிக பாதிப்புகள் ஏற்பட்டுள்ளது.

அதி சக்தி வாய்ந்த இந்த அட்லாடிக் சூறாவளியால் மக்கள் தங்களின் வீடுகளையும் உறவுகளையும் இழந்துள்ளனர். 100 பில்லியன் டாலர் வரை சேதங்களை ஏற்படுத்திய இந்த அசாதாரணமான சூறாவளி காலநிலை மாற்றத்தின் விளைவே. ஆனால் டிரம்ப் காலநிலை மாற்றை தொடர்ந்து மறுக்கிறார்.

அறிவியலையேஅவர்மறுக்கிறார்.பாரிஸ்காலநிலைதீர்மானத்திலிருந்து அமெரிக்காவை அவர் பின்வாங்கச் செய்தார். காலநிலை மாற்றம் நமது பூமியையும் பொருளாதாரத்தையும் அழித்துக்கொண்டிருக்கிறது. நம்மை நாமே பாதுகாத்துக்கொள்ள நாம் செயலாற்றியாக வேண்டும். அதனால் தான் நான் கமலா ஹாரிஸ் லி வாக்களிக்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

# பூமியை கடந்து செல்லும் 3 பெரிய விண்கற்கள் நாசா தகவல்

இஸ்ரேல், அக். 29

பூமியை 3 பெரிய விண்கற்கள் கடந்து செல்ல உள்ளதாக அமெரிக்க விண்வெளி கழகமான நாசா தெரிவித்துள்ளது. இதுகுறித்து விஞ்ஞானிகள் கூறியதாவது:

பூமியை 3 விண்கற்கள் மிக நெருக்கமாக கடந்து செல்ல இருக்கிறது என்பதை நாசா கண்டுபிடித்திருக்கிறது. அதன்படி முதல் விண்கல் பூமியை கடந்து செல்கிறது. 2024 டிபி2 என்று பெயிரிடப்பட்ட இந்த விண்கல் 110 அடி விட்டம் இருக்கும். 7.31 லட்சம் கி.மீ தொலைவில் இது பூமியை கடந்து செல்கிறது. இதன் பாதை இப்போது வரை சீராகத்தான் இருக்கிறது. ஒருவேளை கடைசி நேரத்தில் ஏதேனும் பிரச்னை ஏற்பட்டு இதன் பாதையில் மாற்றம் ஏற்பட்டால் பூமிக்கு பாதிப்பு ஏற்படலாம். 2வது விண்கல் 2007 யூடி3.பூமியிலிருந்து 42 லட்சம் கி.மீ தொலைவில் இது கடந்து செல்ல இருப்பதால் பெரிய அளவுக்கு பாதிப்பு ஏதும் ஏற்படாது. ஆனால் 3வது விண்கல்தான் அச்சத்தை ஏற்படுத்துகிறது.

2020 டபிள்யூ.ஜி என அழைக்கப்டும் இந்த விண்கல் 500 அடி விட்டம் கொண்டது. பூமியிலிருந்து சுமார் 30 லட்சம் கி.மீ தொலைவில் மணிக்கு 33,947 கி.மீ வேகத்தில் இது செல்கிறது. இதன் பாதையில் மாற்றம் ஏற்பட்டு பூமியை மோதினால், அது விழுந்த இடத்தில் 2 கி.மீ ஆழத்திற்கு 4 கி.மீ அகலத்திற்கு பெரும் பள்ளம் உருவாகும். மேலும் 10 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்படும். விண்கல் விழுந்த இடத்திலிருந்து 500 முதல்1000 கி.மீ சுற்றளவுக்கு எந்த கட்டிடமும் இருக்காது. எல்லாம் தரைமட்டமாகிவிடும். தவிர, எரிமலை வெடிப்பு, சுனாமி ஏற்படும்.

ஆனால் இது எதுவும் தற்போது நடக்காது என்று நம்பிக்கை உள்ளது. ஏனென்றால் இந்த விண்கற்கள் செல்லும் பாதையில் குறுக்கே எதுவும் இல்லை. இதனால் பூமி பக்கம் திரும்பும் இல்லை என்றனர்.

# 100/100 மதிப்பெண் பெறுகிறார் உதயநிதி: முதல்வர் மு.க.ஸ்டாலின்

சென்னை, அக். 29

'என் உயிரினும் மேலான' பேச்சுப்போட்டி வெற்றியாளர்களுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சிறப்புரை ஆற்றினார். அப்போது அவர் பேசியதாவது:

★ திமுக என்பது பேசிப்பேசி ஆட்சியை பிடித்த இயக்கம் என்பார்கள். ஆனால் என்ன பேசினோம் என்பதை சொல்லாமல் தவிர்த்து விடுவார்கள்.

★ மூடநம்பிக்கை, பிற்போக்குத்தனம், உலக வரலாறு உள்ளிட்டவை குறித்து பேசினோம் என்பதை சொல்வதில்லை.

★ உலகம் முழுவதும் நடந்த புரட்சி, பெண்ணடிகை தனத்திற்கு எதிராக பேசியவர்கள் திமுக பேச்சாளர்கள்.

★ திமுகவில் இருந்த தலைவர்கள் அனைவரும் சிறந்த பேச்சாளர்களாக திகழ்ந்தவர்கள்.



★ பழந்தமிழர் இலக்கியங்களை பாமர மக்களுக்கும் கொண்டு சேர்த்தவர் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி.

★ பேச்சுக்கலை என்பது சமூகத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்த கூடிய வல்லமை படைத்தது.

★ நான் வைக்கும் தேர்வுகளில் எல்லாம் 100 மதிப்பெண்களை பெறுகிறார் உதயநிதி.

★ இளைஞரணி செயலாளர் என்பது பதவி கிடையாது. அது பெரும் பொறுப்பு.

★ நீட் தேர்வுக்கு தடை கோரி கையெழுத்து இயக்கம், நீர்நிலை தூர்வாரும் பணியை சிறப்பாக செய்தவர் உதயநிதி.

இவ்வாறு அவர் பேசினார்.

முன்னதாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்ட பதிவில், களப்போரில் துணை நிற்கவுள்ள கருத்தியல் சொற்போர் வீரர்களை வாழ்த்தி வரவேற்கிறேன் என கூறியுள்ளார்.

# அகில இந்திய வழக்கறிஞர் கூட்டமைப்பு சார்பில் பாண்டிச்சேரி தென்னிந்திய மாநாடு

வல்லம்.அக் 29

அகில இந்திய வழக்கறிஞர் கூட்டமைப்பு சார்பில் பாண்டிச்சேரி தென்னிந்திய மாநாடு இல் பாண்டிச்சேரி செண்பகா ஹோட்டலில் நடைபெற்றது. அகில இந்திய வழக்கறிஞர் கூட்டமைப்பு தலைவர் டி.கே. சத்தியசீலன் தலைமையில் நடைபெற்றது.சிறப்பு விருந்தினராக பாண்டிச்சேரி ஆளுநர் கைலாசநாதன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.மெட்ராஸ் உயர் நீதிமன்ற நீதி அரசர் கிருஷ்ணன்,செஞ்சி டிஎஸ்பி செந்தில் குமார்,பார் அசோசியேஷன் தலைவர் செல்வம் உள்ளிட்டோர்கலந்து கொண்டு சிறப்பித்தனர்.அகில இந்திய வழக்கறிஞர் கூட்டம் மாநில தலைவர் சாரநாத் வரவேற்புரை ஆற்றினார்.மாநில துணை தலைவர்கள் வழக்கறிஞர்கள்சுருளிராஜன், கோட்டீஸ்வரன், சரவணன்உள்ளிட்டோர்கலந்து கொண்டனர்.இறுதியில் பாண்டிச்சேரி மாநில தலைவர் வழக்கறிஞர் சுகுமார் நன்றி கூறினார்.



# தீபாவளி பண்டிகை: சொந்த ஊர்களுக்கு செல்ல அரசு பஸ்களில் 1.31 லட்சம் பேர் முன்பதிவு

சென்னை, அக். 29

தீபாவளி பண்டிகை வரும் 31ம் தேதி கொண்டாடப்படுகிறது. இதையொட்டி, தமிழகம் முழுவதும் இன்று முதல் 3 நாட்களுக்கு சிறப்பு பஸ்கள் இயக்கப்படுகின்றன, சென்னையில் இருந்து வழக்கமாக இயக்கப்படும் பஸ்களுடன் 4 ஆயிரத்து 900 சிறப்பு பஸ்கள், தமிழகத்தின் மற்ற பகுதிகளில் 2 ஆயிரத்து 910 சிறப்பு பஸ்கள் இயக்க போக்குவரத்துத்துறை நடவடிக்கை எடுத்துள்ளது. இதன் தொடர்ச்சியாக, வழக்கமான பஸ்களுடன் சென்னையில் இருந்து 700 பஸ்களும், தமிழகத்தின் பல்வேறு இடங்களில் இருந்து பிற முக்கிய பகுதிகளுக்கு 330 பஸ்களும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி அடுத்த 3 நாட்களுக்கு 14 ஆயிரத்து 086 பஸ்களை இயக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில், தீபாவளி பண்டிகைக்காக அரசு பஸ்களில் (இன்று முதல் அக்.30வரை) சொந்த ஊர்களுக்குச் செல்ல இதுவரை 1.31 லட்சம் பேர் முன்பதிவு செய்துள்ளனர். சென்னையில் இருந்து மட்டும் பஸ்கள் வாயிலாக 5 லட்சம் பேர் பயணம் செய்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

# வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளுக்கான சிறப்பு முகாம் தேதி மாற்றம்

சென்னை, அக். 29

தமிழகத்தில் வருகிற நவம்பர் 9 மற்றும் 10 ஆகிய தேதிகளில் நடைபெற இருந்த வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளுக்கான சிறப்பு முகாம்களின் தேதி மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக தலைமைத் தேர்தல் அதிகாரி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, 01.01.2025ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்தம் 29.10.2024 முதல் 06.01.2025 வரை மாநிலம் முழுவதும் நடைபெற்று வருகிறது.

சிறப்பு சுருக்கமுறைத் திருத்தத்தின், ஒரு பகுதியாக வாக்காளர்கள் தங்கள் பெயரைச் சேர்ப்பதற்கும், வாக்காளர் பட்டியலில் திருத்தம் செய்வதற்கும் வசதியாக இந்தியத் தேர்தல் ஆணையத்தால், 09.11.2023, 10.11.2024, 23.11.2024 மற்றும் 24.11.2024 (சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை) ஆகிய தேதிகளில் வாக்குச்சாவடி அமைவிடங்களில் சிறப்பு முகாம்கள் அறிவிக்கப்பட்டன.

இதற்கிடையில், தமிழக அரசால், 09.11.2024 அன்று பணிநாளாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இந்தியத் தேர்தல் ஆணையம், சிறப்பு முகாம் தேதிகளை 09.11.2024 (சனிக்கிழமை) மற்றும் 10.11.2024 (ஞாயிற்றுக்கிழமை)–க்கு பதிலாக, 16.11.2024 (சனிக்கிழமை) மற்றும் 17.11.2024 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய தேதிகளாக மாற்றியமைத்து அறிவித்துள்ளது.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.



விருதுநகர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் மற்றும் மூத்தகுடி மக்களுக்காக அமைக்கப்பட்டுள்ள சிறப்பு அமருமிடத்திற்கு சென்று கலெக்டர் ஜெயசீலன் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்.

# மாணவியை நடுரோட்டில் கடுமையாக தாக்கிய உடற்கல்வி ஆசிரியர் கைது

ஓசூர், அக். 29

ஓசூரில் பள்ளி மாணவியை உடற்கல்வி ஆசிரியர் கடுமையாக தாக்கும் வீடியோ காட்சிகள் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியது. கடந்த 23ம் தேதி மாவட்ட அளவிலான கைப்பந்து போட்டியில் பங்கேற்ற போது ஆசிரியையின் கைக்கடிகாரத்தை திருடியதாக குற்றம்சாட்டி நடுரோட்டில் மாணவி மீது உடற்கல்வி ஆசிரியர் சரமாரி தாக்குதல் நடத்தினார்.

மாணவியை கண்மூடித்தனமாக தாக்கியதில் அவர் நிலை தடுமாறி கீழே விழுந்தார். இந்த சம்பவம் தொடர்பான காட்சிகள், அங்கு பொறுத்தப்பட்டிருந்த சி.சி.டி.வி. கேமராவில் பதிவாகியிருந்தது. இந்த காட்சிகள் தற்போது வெளியாகி பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. வீடியோ வெளியான நிலையில், இது தொடர்பாக போலீசார் விசாரணை நடத்தினர்.



இதையடுத்து அரசு உதவிபெறும் பள்ளியில் உடற்கல்வி ஆசிரியராக பணிபுரியும் தியாகராஜன் பணியிடை நீக்கம் செய்யப்பட்டார். இந்த நிலையில் தற்போது ஆசிரியர் தியாகராஜன் மீது பெண் வன்கொடுமைச்சட்டம்உள்ளிட்ட3பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்துள்ள போலீசார்அவரை கைது செய்துள்ளனர்.

# 26 கிலோ அரிசி மூட்டை விலை 20 ரூபாய் குறைந்தது




சென்னை, அக்.29

தமிழகத்தில் அரிசி விலை குறைந்துள்ளது. நெல்லின் வரத்து அதிகரிப்பு மற்றும் புதிய நெல் அறுவடை ஆகியவற்றின் காரணமாக அரிசி விலை குறைந்திருப்பதாக வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

26கிலோஅரிசிமூட்டை தற்போது சந்தையில் ரூ.930 முதல் 1700 வரையில் கிடைக்கிறது. அரிசியின் தரத்தை பொறுத்து வகைப்படுத்தப்பட்டுள்ள இந்த அரிசி மூட்டைகள் அனைத்துமே 20 ரூபாய் குறைந்து உள்ளது.

இது தொடர்பாக தமிழ்நாடு அரிசி ஆலை உரிமையாளர்கள் மற்றும் நெல்அரிசி மொத்த வியாபாரிகள் சம்மேளன தலைவரான துளசிங்கம் கூறியதாவது:

தீபாவளி பண்டிகை நெருங்கி விட்டதால் மக்கள் பட்டாசு, இனிப்பு வகைகளை வாங்குவதில் தான் தற்போது ஆர்வம் காட்டுகின்றனர். நெல்வரத்து அதிகரிப்பு மற்றும் புதிய நெல் அறுவடை ஆகியவற்றால் 26 கிலோ அரிசிமூட்டை ரூ.20வரையில் குறைந்துள்ளது.

இட்லிஅரிசியின்விலையும் சரிவை சந்தித்துள்ளது. ரூ.1010க்கு விற்பனையான26கிலோஇட்லி அரிசியின் விலை தற்போது 980ஆகவும், ரூ.1030க்கு விற்பனை செய்யப்பட்ட இட்லி அரிசியின் விலை 990ஆகவும் குறைந்துள்ளது.

செங்குன்றம் பகுதிக்கு தினமும் லாரிகளில் வருகை தரும் நெல்லின் அளவு அதிகரிப்பு, திருவள்ளூர்மாவட்டம்பேரம்பாக்கம், கடம்பத்தூர், பகுதிகளில் புதிய நெல் அறுவடை பணிகள் தொடங்கி இருப்பதும் இந்த விலை குறைவுக்கு காரணமாகும்.

அதே நேரத்தில் ரேசன் கடைகளில் வழங்கப்படும் விலையில்லா அரிசியும் தரமாக உள்ளது. இதுவும் அரிசி விலை குறைவுக்கு ஒரு காரணமாகும். 1 கிலோவில் இருந்து 20 கிலோ வரையில் மட்டுமே அரிசிக்குஜி.எஸ்.டி. வரி விதிக்கப்படுகிறது.

அதனால் வியாபாரிகள் அனைவருமே 26 கிலோ அரிசி பையையே விற்பனை செய்கிறார்கள். 25 கிலோவுக்கு மேல் உள்ள அரிசி மூட்டைகளுக்கு ஜி.எஸ்.டி. கிடையாது என்பதால் 25 கிலோ மூட்டையை 26 கிலோவாக வியாபாரிகள் விற்பனை செய்து வருகிறார்கள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# திண்டிவனத்தில் இருந்து விக்கிரவாண்டி சாலை வரையில் ஓட்டல்களில் நிரம்பி வழிந்த கூட்டம்



சென்னை, அக். 29


விக்கிரவாண்டியில் நடைபெறும் த.வெ.க. மாநாட்டுக்குவந்ததொண்டர்கள் மற்றும் நிர்வாகிகளால் திண்டிவனத்தில் இருந்து விக்கிரவாண்டி சாலை வரையில்உள்ளஅனைத்து ஓட்டல்களும் நிரம்பி வழிந்தன.

மாநாடு நடைபெறும் இடத்தை சுற்றி உள்ள பெரிய ஓட்டல்கள் முதல் சிறிய ஓட்டல்கள் வரை அனைத்திலுமே கட்சி தொண்டர்கள் காலை, மதியம் என உணவை சாப்பிடுவதற்கு அலைமோதினார்கள். இதன் காரணமாக சாலையோரம் உள்ள கையேந்தி பவன் ஓட்டல்களிலும் கூட்டம்அதிகமாககாணப்பட்டது.

காலை உணவாக இட்லி, தோசைஉள்ளிட்ட உணவுகளை தொண்டர்கள்வாங்கிசாப்பிட்டதால் ஓட்டல்களில் உணவு வகைகளும்சீக்கிரமாகவே விற்று தீர்ந்தன.

மேலும்பலர்உணவுகள் கிடைக்காமல் திணறிவந்தனர். ஆனால் மாநாட்டில் இரவுநேர உணவுகளுக்கு மட்டுமே ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# தவெக மாநாடு: வைரலாகும் தொண்டர்களின் நெகிழ்ச்சி வீடியோக்கள்





விழுப்புரம், அக். 29

தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் மாநாடு விக்கிரவாண்டி வி.சாலையில் இன்று மாலை நடைபெற உள்ளது. இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ரசிகர்கள் திரளாக வந்த வண்ணம் உள்ளனர். விஜய்ன்முகமூடி அணிந்தபடி தொண்டர்கள்மாநாட்டுக்கு வந்துள்ளனர்.

இந்த நிலையில் சமூக வலைதளங்களில் தவெக தொண்டர்களின் நெகிழ்ச்சி வீடியோக்கள் வைரலாகி வருகிறது. ஒரு தொண்டர் சத்தியமங்கலத்தில் இருந்து விழுப்புரத்திற்கு நடந்தே வருகை தருகிறார்.

மேலும் தமிழகவெற்றிக்கழகத்தின் முதல் மாநில மாநாட்டிற்கு சௌந்தரராஜா அவர்களின் தலைமையில், சென்னை, வடபழனியில் தொடங்கி விக்கிரவாண்டி வரை நமது மண்ணுக்கும் மக்களுக்கும் அறக்கட்டளையினர் சைக்கிள் பேரணி நடத்தினர்.

பெங்களூருவில் இருந்து பாண்டிசேரி செல்லும் ரெயிலில் பயணித்த ரசிகர்கள் அடுத்த முதலமைச்சர் என கோஷம் எழுப்பி கொண்டாடினர்.

இதற்கும் மேலாக மாநாட்டிற்கு விடுமுறை கொடுக்காததால் வேலையை உதறி விட்டு மாநாட்டிற்கு ஒரு தொண்டர் வருகை தந்துள்ளார்.

தமிழ்நாட்டை தவிர கேரளா, கர்நாடகாவில் இருந்து விஜய் ரசிகர்கள் மாநாட்டில் கலந்து கொள்ள விழுப்புரம் செல்கிறார்கள். இந்த ரசிகர்கள் கர்நாடகாவில் இருந்து 289 கிலோமீட்டர் ஆட்டோவிலேயே மாநாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

இப்படி தவெக மாநாடு தொடர்பான நெகிழ்ச்சி வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வரும் நிலையில் விபத்தில் 3 தவெக தொண்டர்கள் இறந்துள்ளதாகவும் செய்திகள் வந்துள்ளது.

# விவசாயி தோட்டத்தில் முளைத்த 2 கிலோ எடையுள்ள காளான்



வடமதுரை, அக். 29

மழை காலத்தில் இடி, மின்னல் அடிக்கும் போது காளான் முளைப்பதுண்டு. கிராமப்புறங்களில் இந்த காளான்களை சமைத்து சாப்பிடுவார்கள். ஆனால் இந்த வழக்கம் நகர் புறங்களிலும் தொடரவே செயற்கை முறையில் காளான்கள் வளர்க்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றனர். காளான்கள் மூலம் தயாரிக்கப்படும் உணவுகள் உடலில் பல்வேறு நோய்களை தீர்ப்பதாக ஆய்வுகள் கூறிவரும் நிலையில் இதன் மீதான ஆர்வமும் மக்களிடையே அதிகரித்து வருகிறது. இந்நிலையில் திண்டுக்கல் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பரவலாக மழை பெய்தது. செங்குளத்துப்பட்டியில் உள்ள சுந்தரமகாலட்சுமி என்பவரது தோட்டத்தில் இன்று காலை 2 கிலோ எடையுள்ளமிகப்பெரியகாளான் முளைத்திருந்ததை அவரது மகன் கவின் பார்த்தார். இதுகுறித்த தகவல் அப்பகுதி மக்களிடையே பரவவே அந்தகாளானை ஆர்வத்துடன் வந்து பார்த்தனர். அந்த காளானைவேரோடுபறித்து வீட்டிற்கு சமையலுக்கு எடுத்துச் சென்றனர்.

# 105 கிலோ கஞ்சா வழக்கில் கைதானவர்: பாளையங்கோட்டை ஜெயிலில் கைதி 'திடீர்' உயிரிழப்பு




நெல்லை, அக். 29

தென்காசி மாவட்டம் புளியங்குடியை சேர்ந்தவர் அய்யனு. இவரது மகன் முருகானந்தம் (வயது 30).

இவர் கடந்த ஆண்டு சிவகிரி போலீஸ் நிலைய எல்லைக்கு உட்பட்ட பகுதியில் 105 கிலோ கஞ்சா பதுக்கி வைத்திருந்ததாக போலீசாரால் கைது செய்யப்பட்டார்.

அதனைத்தொடர்ந்து கோர்ட்டில் ஆஜர் படுத்தப்பட்டு பாளையங்கோட்டை மத்திய சிறையில் விசாரணை கைதியாக அடைக்கப்பட்டார்.

இந்நிலையில் நேற்று இரவு சிறையில் தனது அறையில் இருந்த முருகானந்தத்திற்கு திடீரென உடல் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

அப்போது அவர் மயங்கி விழுந்ததாக கூறப்படுகிறது. இதையடுத்து சிறை வார்டன்கள் அவரை மீட்டு நெல்லை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றனர். ஆனால் செல்லும் வழியிலேயே முருகானந்தம் இறந்து விட்டார்.

இதுகுறித்து பெருமாள்புரம் போலீசில் அளிக்கப்பட்ட புகாரின் பேரில் இன்ஸ்பெக்டர் ஹரிஹரன் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்.

# விஜய் நல்ல நிலைக்கு வர வேண்டும் என ஆசீர்வதிக்கிறேன் நடிகர் பிரபு



நெல்லை, அக். 29

நடிகர் பிரபு இன்று நெல்லையில் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:

நடிகர் விஜய்க்கு எனது முழு ஆதரவு உண்டு. எனது தந்தை ஆசியும், எனது ஆதரவும் அவருக்கு உண்டு. ஜனநாயக நாட்டில் யார் வேண்டுமானாலும் கட்சி ஆரம்பிக்கலாம். விஜய் நல்ல நிலைக்கு வரவேண்டும் என ஆசீர்வதிக்கிறேன்.

விஜய் இவ்வளவு தைரியமாக இறங்கி அடித்து நொறுக்குகிறார் என்றால் அவருக்கு ஆண்டவன் ஆசீர்வாதம் உள்ளது. விஜய் நல்ல பாதையில் செல்வார்என்றநம்பிக்கை உள்ளது.

இவர் அவர் கூறினார்.

# முல்லை பெரியாறு அணை நீர்மட்டம் உயர்வு



கூடலூர், அக். 29

வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்ததை தொடர்ந்து தேனி மாவட்டத்தில் பரவலாக மழை பெய்துவருகிறது. மேலும் நீர்பிடிப்பு பகுதியில் பெய்து வரும் தொடர் மழைகாரணமாகமுல்லை பெரியாறு அணைக்கு நீர் வரத்து 1180 கனஅடியாக உயர்ந்துள்ளது. இதனால் அணையின் நீர்மட்டமும் சீராக உயர்ந்து 122.95 அடியாக உள்ளது.

அணையிலிருந்து தமிழக பகுதிக்கு 456 கனஅடி நீர் திறக்கப்படுகிறது. அணையில் 3212 மி.கன அடி நீர் இருப்பு உள்ளது. வருசநாடு, அரசரடி, கண்டமனூர், கடமலைக்குண்டு உள்ளிட்ட பகுதிகளில் பெய்த தொடர்மழையால் மூலவைகையாற்றில்நீர்வரத்து அதிகரித்தது. மேலும் வைகை அணைக்கு நீர்வரத்து 1191 கனஅடியாக உயர்ந்தது. அணையின் நீர்மட்டம் 59.68 அடியாக உள்ளது.

மதுரை மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக கன மழை பெய்து வருகிறது. இதனால் நகர் பகுதியில் சாலைகளில் வெள்ள நீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. மேலும் வீடுகளில் தண்ணீர் புகுந்ததால் கடும் அவதியடைந்தனர். இதனால் பாசனத்திற்கு தண்ணீர் தேவை குறைந்தது. இதன் காரணமாக வைகை அணையிலிருந்து திறக்கப்படும் பாசனத்திற்கான நீர் 500 கனஅடியாக குறைக்கப்பட்டது.

குடிநீருக்காக 69 கனஅடியுடன் சேர்த்து 569 கன அடி நீர் திறக்கப்படுகிறது. அணையில் 3542 மி.கன அடி நீர் இருப்பு உள்ளது. மஞ்சளாறு அணை நீர்மட்டம் 55 அடியில் நீடித்து வருகிறது. இதனால் அணைக்கு வரும் 224 கன அடி நீர் அப்படியே திறக்கப்படுகிறது. சோத்துப்பாறை அணையின் நீர்மட்டம் 126.28 அடியாக உள்ளது. 64.34 கன அடி நீர் வருகிறது. குடிநீர் மற்றும் பாசனத்திற்காக 30 கனஅடியும், மற்றவை உபரியாகவும் திறக்கப்படுகிறது. பெரியாறு 7.2, தேக்கடி 20.4, கூடலூர் 8.2, சண்முகாநதி அணை 4.6, உத்தமபாளையம் 4.6, வீரபாண்டி 4.6 மி.மீ. மழையளவு பதிவாகி உள்ளது.

# சுற்றுலா தலம் போல் காட்சியளித்த விக்கிரவாண்டி சாலை



விழுப்புரம், அக். 29

மாநாடு நடைபெறும் விசாலை பகுதி தமிழகம் முழுவதும் பிரபலமான இடமாக தற்போது உருவெடுத் துள்ளது. திருச்சி சென்னை தேசிய நெடுஞ்சாலையில் வாகனங்களில் செல்பவர்கள் பலர் மாநாடு திடல் அருகே வாகனங்களை நிறுத்தி சிறிது நேரம் நின்று பார்த்துவிட்டு செல்பி எடுத்து செல்கின்றனர். இது போன்று மின் ஒளியில் ஜொலித்தமாநாடுதிடலை பார்ப்பதற்காக குடும்பத்துடன் குழந்தைகளுடன் ஆண்களும் பெண்களும் திரண்டு வந்து பார்வையிட்டனர். சொகுசு வாகனங்களிலும் மோட்டார் சைக்கிளிலும் மேலும் அருகில் உள்ள கிராம வாசிகள்சைக்கிள்களிலும் வந்து மாநாட்டு திடலை பார்த்து சென்றதால் சுற்றுலா தலம் போல் காட்சியளித்தது விக்கிரவாண்டி சாலை.

# சென்னையில் வெள்ள அபாயம் ஏற்பட இதுதான் காரணம்... WWF வெளியிட்ட அறிக்கையில் பரபரப்பு தகவல்



புதுடெல்லி, அக். 29

ஈர நிலங்கள் என்பது சதுப்பு நிலங்கள், கழிமுகப் பகுதி, உவர் அல்லது உப்பு குறைந்த, அலையின் ஆழம் 6 மீட்டருக்கு மேல் இருக்காத கடல் நீர் உள்ள பகுதிகள் என வரையறுக்கப்படுகிறது.

இந்த வரையறை அனைத்து ஏரிகள், ஆறுகள், நிலத்தடி நீர்நிலைகள், பிற முக்கிய நீர்நிலைகளை உள்ளடக்கியது. வளி மண்டலத்தில் இருந்து கார்பனை சேமித்து, ஆழமற்ற நீரில் இருந்து மாசுகளை நீக்கி நீரை சுத்திகரித்தல், கார்பன் வரிசைப்படுத்துதல் மூலம் காலநிலை நிலைமைகளை ஈரநிலங்கள் கட்டுப்படுத்த உதவுகின்றன.

இந்த நிலையில் உலக வனவிலங்கு நிதியம் வெளியிட்ட அறிக்கையில், ஈர நிலங்களின் இழப்பு, வறட்சி மற்றும் வெள்ளம் தொடர்பான கவலைக்குரிய முக்கியமான பகுதிகளை தெரிவித்துள்ளது.

இதில் வங்காள விரிகுடாவில் சென்னையில் உள்ள விரைவான நகர்ப்புற விரிவாக்கம் ஈரநிலங்களின் பரப்பளவில் 85 சதவீத சரிவை ஏற்படுத்தியது.

இது ஈரநில சுற்றுச்சூழல் அமைப்புகளால் வழங்கப்படும் முக்கிய சேவைகளை மோசமாக பாதித்தது. சுருங்கும் ஈரநிலங்களும் நகரத்தை வெள்ளத்தால் அதிகம் பாதிக்கக்கூடியதாக மாற்றியது.

2015ம் ஆண்டு சென்னையில் பெய்த கன மழைமுன்னெப்போதும் இல்லாதது. ஈரநிலங்கள் சுருங்கி வருவதால் இயற்கையான வடிகால் வழிகள் இழக்கப்பட்டு நகரின் பெரும் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின. சதுப்பு நில இழப்பை சந்திக்கும் இடம் சென்னை மட்டும் அல்ல.

இப்பிரச்சனை நாடு முழுவதும் உள்ளது. சதுப்பு நிலங்கள் சுருங்குவதால் ஏற்படும் பாதிப்புகளைஉணர்ந்துஅவற்றை மீட்டெடுப்பதற்கான முயற்சிகளையும் அரசாங்கங்கள் செய்து வருகின்றன என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மதுராந்தகம் ஏரி சீரமைப்பு பணிதாமதம்: பயிர் சாகுபடி செய்ய முடியாமல் விவசாயிகள் தவிப்பு ராமதாஸ் குற்றச்சாட்டு



சென்னை, அக். 29

பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

சோழர் காலத்தில் கட்டப்பட்ட தமிழ்நாட்டின் மிகப்பெரிய ஏரிகளில் ஒன்றான மதுராந்தகம் ஏரியை தூர்வாரி சீரமைக்கும் பணிகள் நான்காண்டுகள் ஆகியும் இன்னும் நிறைவடையவில்லை.

சீரமைப்புப் பணிகளால் கடந்த நான்காண்டுகளாக பயிர் சாகுபடி செய்ய முடியாமல் பெரும் வருவாய் இழப்புக்கு ஆளாகியுள்ளனர். ஆனால், இதுகுறித்த அக்கறையும், கவலையும் சிறிதும் இல்லாமல் ஏரி சீரமைப்புப் பணிகளை தமிழக அரசின் நீர்வளத்துறை தமதப்படுத்தி வருவது கண்டிக்கத்தக்கது.

மதுராந்தகம் ஏரி சீரமைப்புப் பணிகள் தாமதமாவதால், வேளாண்மை மட்டுமின்றி குடிநீர் வழங்கலும் பாதிக்கப்பட்டிருக்கிறது. மதுராந்தகம் ஏரியை நம்பி முப்போகம் சாகுபடி செய்து வந்த விவசாயிகள், வாழ்வாதாரத்தையும் இழந்து, குடிநீருக்கும்திண்டாடும் நிலைமை இனியும் தொடர அனுமதிக்கக்கூடாது.

பல்லாயிரக்கணக்கான உழவர்களின் வாழ்வாதாரமாக திகழும் மதுராந்தகம் ஏரியை தூர்வாரி, சீரமைக்கும் பணிகள் விரைவுபடுத்தப்பட வேண்டும். வரும் ஜூன் மாதத்திற்குள் பணிகளை முடிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். நடப்பாண்டையும் சேர்த்து தொடர்ந்து 4 ஆண்டுகளாக மதுராந்தகம் ஏரி பாசன நிலங்களில் சாகுபடி பாதிக்கப்பட்டிருப்பதாலும், வயல்களில் வளர்ந்துள்ள கருவேல மரங்களை அகற்ற வேண்டியிருப்பதாலும் ஏக்கருக்கு ஆண்டுக்கு ரூ.25,000 வீதம் நான்காண்டுகளுக்கு சேர்த்து ஏக்கருக்கு ரூ.1 லட்சம் வீதம் உழவர்களுக்கு இழப்பீடு வழங்க தமிழக அரசு முன்வரவேண்டும் என்று வலியுறுத்துகிறேன். இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

# கொடைக்கானலில் மருத்துவக்குணம் கொண்ட நெய்மிளகாய் சீசன் தொடக்கம்



கொடைக்கானல், அக். 29

தமிழகத்தில் இருந்து இலங்கைக்கு பல்வேறு தொழில்களுக்காக தமிழர்கள்சென்றனர். இதில் தாயகம் திரும்பிய தமிழர்கள் நெய்மிளகாய் கொண்டு வந்தனர். இந்த மிளகாய்களை கொடைக்கானல் மலைக்கிராமங்கள், ஏற்காடு, ஊட்டி உள்ளிட்ட மலைப்பகுதிகளில சாகுபடி செய்தனர். சீதோசன நிலை நெய்மிளகாய் வளர்வதற்கு ஏற்றதாக இருந்ததால் ஆண்டு முழுவதும் மலை ஸ்தலங்களில் நெய்மிளகாய் சாகுபடி செய்யப்படுகிறது.

பம்பரம் போன்று தோற்றமளிக்கும் நெய்மிளகாய் நாட்டு மிளகாயை விட காரத்தன்மை அதிகம் கொண்டதாகும். ஒரு மிளகாய் அதிகபட்சம் 10 கிராம் வரை இருக்கும். குழம்பில் போடும்போது நெய்போன்று வாசனை கமகமக்கும். கொடைக்கானலில் தொடர்ந்து சாகுபடி செய்யப்பட்ட போதும் மழைக்காலமே இதன் சீசனாகும். தற்போது தொடர்மழை காரணமாக நெய்மிளகாய் வரத்து அதிகளவில் உள்ளது.

180 கிராம் கொண்ட 1 பாக்கெட் ரூ.100க்கு விற்பனை செய்யப்படுகிறது. மலைப்பகுதியில் ஒருசில விவசாயிகள் மட்டுமே நெய்மிளகாய் சாகுபடி செய்கின்றனர். இதன் காரணமாகவே விலை அதிகமாக உள்ளது. இருப்பினும் சமையலில் பயன்படுத்தினால் நெய் சேர்த்தது போல் ருசியாக இருக்கு ஒருதடவை சுவைத்து பார்த்தவர்கள் மீண்டும் அதனை தேடி வந்து வாங்கிச்செல்கின்றனர். தற்போது சீசன் தொடங்கி உள்ளநிலையில் மேலும் வரத்து அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

# தீபாவளியை முன்னிட்டு பகுதி நேர ஆசிரியர்களுக்கு ஊக்கத்தொகை வழங்க வேண்டும்: ஓ.பி.எஸ்.வலியுறுத்தல்



சென்னை, அக். 29

முன்னாள்முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாட்டில் உள்ள அரசுப்பள்ளிகளில்15,000க்கும் மேற்பட்ட பகுதி நேர ஆசிரியர்கள் 12 ஆண்டுகளாக மாதம் 12,500 ரூபாய் தொகுப்பூதியத்தை பெற்றுக் கொண்டு பணியாற்றி வருகிறார்கள். தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, அக்டோபர் மாத சம்பளத்தை முன்னதாக வழங்கவேண்டும் அல்லது ஊக்கத் தொகை அளிக்க வேண்டும் அல்லது வட்டியில்லா முன்பணம் வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தி வருகிறார்கள். அதற்குக்கூடதி.மு.க. செவி சாய்க்க மறுக்கிறது என்பது வேதனை அளிக்கும் செயல் ஆகும். அறப்பணி செய்யும் ஆசிரியர்களை அலையவிடுவது என்பது கடும் கண்டனத்திற்குரியது. முதலமைச்சர் இதில் உடனடியாகத் தலையிட்டு, தீபாவளிப் பண்டிகையை பகுதி நேர ஆசிரியர்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாட ஏதுவாக, அவர்களுக்கு ஒரு மாத சம்பளத்தை ஊக்கத் தொகையாக வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று அ.தி.மு.க. தொண்டர்கள்உரிமை மீட்புக் குழுவின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறே இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# விஜய் அரசியல் கட்சி தொடங்கியதை வரவேற்று வாழ்த்துகிறேன் எச்.ராஜா



காளையார்கோவில், அக். 29

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவிலில் மருதுபாண்டியர் குருபூஜையில் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்திய பா.ஜ.க. மூத்த தலைவர் எச்.ராஜா நிருபர்களிடம் கூறியதாவது:

நாட்டின் சுதந்திர போராட்டத்திற்காக முதன் முதலாக ஆங்கிலேயர்களை எதிர்த்து குரல் கொடுத்தவர்கள் மருது பாண்டியர்கள். அவர்களது வீரம் போற்று தலுக்குரியது. ஆங்கிலேயர்களிடம் சரணடைந்து தூக்கிலிடப்பட்டார்கள். அவர்களது தியாகம் பாராட்டக் கூடியது. தேசியமும், தெய்வீகமும் நிறைந்த மாமன்னர் மருது பாண்டியர்கள் இழந்த ஆட்சியை மீண்டும் கைப்பற்றியவர்கள். அவர்களது தியாகத்திற்கு வீரவணக்கம் செலுத்தும் வகையில் இன்று இங்கு பா.ஜ.க. சார்பில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

தமிழ்த்தாய் வாழ்த்து பாடல்தவறாக பாடியதாக கவர்னர் ரவியை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார். ஆனால் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின்பங்கேற்ற நிகழ்ச்சியில் அரசு ஊழியர்கள்தமிழ்த்தாய் வாழ்த்தை தவறாக பாடியுள்ளார்கள். இதற்காக உதயநிதி ஸ்டாலினை முதலமைச்சர் டிஸ்மிஸ் செய்வாரா? முதலில் அவர் உதயநிதி ஸ்டாலினை டிஸ்மிஸ் செய்துவிட்டு அதற்கு அப்புறம் தமிழ்த்தாய் வாழ்த்து பற்றி பேசட்டும்.

நடிகர் விஜய் இன்று அரசியல் இயக்கத்தை தொடங்குகிறார். அதற்காக அவரை வாழ்த்துகிறேன். யார்வேண்டுமானாலும் அரசியல் இயக்கம் தொடங்கலாம். முதலில் அவர்தனது கொள்கையை சொல்லட்டும். அவருக்கு மக்கள் ஆதரவு இருக்க வேண்டும். அவர் தேசிய அளவில் அரசியல் செய்யப்போகிறாரா, மாநில அரசியல் செய்யப்போகிறாரா? என்பதை பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# 3 சுங்கச்சாவடிகளில் வாகனங்கள் இலவசமாக செல்ல அனுமதி போலீசார் நடவடிக்கை




விழுப்புரம், அக். 29

விக்கிரவாண்டி வி.சாலையில் இன்று பிரமாண்டமாக நடைபெறும் விஜய் கட்சி மாநாட்டுக்கு தமிழ்நாடு முழுவதிலும் இருந்து தமிழக வெற்றிக்கழக கட்சி தொண்டர்கள் அதிகாலை முதல் வாகனங்களில் அணிவகுத்த வண்ணம் உள்ளனர்.

சென்னை விக்கிரவாண்டி ஜி.எஸ்.டி ரோட்டில் விஜய் கட்சி கொடி கட்டிய கார்கள், பஸ்கள், வேன்கள் என ஆயிரக்கணக்கான வாகனங்கள் விக்கிரவாண்டியை நோக்கி படையெடுத்து செல்கின்றது.

இதன் காரணமாக விக்கிரவாண்டி, உளுந்தூர்பேட்டை, ஓங்கூர் சுங்கச்சாவடிகளில் வாகன நெரிசல் ஏற்படலாம் என கருதி முன் எச்சரிக்கை நடவடிக்கையாக வாகனங்கள் கட்டணம் செலுத்தாமல்இலவசமாகசெல்ல அனுமதிக்கப்பட்டன.

விக்கிரவாண்டி சுங்கச்சாவடியில்த.வெ.க. கட்சி வாகனங்கள் செல்ல தடுப்புகளை அகற்றி தனி வழி ஏற்படுத்தப்பட்டு உள்ளது. இதனால் வாகனங்கள் நெரிசலில் சிக்காமல் சென்று வருகின்றன.

# விஜய்யை பார்ப்பதற்காக மாநாட்டு திடலில் தாயுடன் விடிய விடிய காத்திருந்த மாணவி



விழுப்புரம், அக். 29

வேலூர் அருகே உள்ள சோழவரத்தை சேர்ந்தவர் சுகன்யா. இவரது மகள் லாவண்யா அடுக்கம்பாறையில் டிப்ளமோ நர்சிங் படித்து வருகிறார். நேற்று இரவு தாயும் மகளும் வேலூரில் இருந்து புறப்பட்டு மாநாட்டு திடலுக்கு வந்தனர்.

திடலுக்குள் யாரையும் அனுமதிக்காததால் திடலுக்கு வெளியே விடிய விடிய இருவரும் காத்திருந்தனர். இதுபற்றி லாவண்யா கூறியதாவது:

எனக்கு விஜய்யை ரொம்பரொம்பபிடிக்கும். இதுவரைநேரில்பார்த்தது கிடையாது. எப்படியாவது இந்த முறை நேரில் பார்த்து விட வேண்டும் என்ற ஆசையில் புறப்பட்டு வந்தோம். எங்கள் ஊரில் இருந்து என்னைப் போல் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் வந்துள்ளார்கள். கண்விழித்து விடிய விடிய காத்திருந்தது கஷ்டமாக தெரியவில்லை. எப்படியாவது இன்று விஜய்யை பார்த்து விட வேண்டும் என்று ஆசையோடு காத்திருக்கிறேன். எனக்கு இப்போது 17 வயது ஆகிறது. வருகிற தேர்தலில் முதல் ஓட்டு போடுகிறேன். அதுவும் விஜய்க்கு போடப் போகிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

# பாபநாசம் அணை நீர்மட்டம் 95 அடியாக உயர்வு



நெல்லை, அக். 29

நெல்லை, தென்காசி, தூத்துக்குடி மாவட்டங்களில் நேற்று பரவலாக மழை பெய்தது.

நெல்லை மாவட்டத்தில் நேற்று மாநகர் மட்டுமல்லாது புறநகர் பகுதிகளிலும் பகலில் வெயில் அடித்து வந்த நிலையில் மாலை நேரத்தில் பரவலாக மழை பெய்தது. களக்காடு, சேரன்மகாதேவி, ராதாபுரம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் மிதமான சாரல் மழை பெய்தது.

அதிகபட்சமாக சேரன்மகாதேவியில் 5 மில்லிமீட்டரும், ராதாபுரத்தில் 4 மில்லிமீட்டரும் மழை பெய்துள்ளது. நாங்குநேரி, களக்காட்டில் தலா 2 மில்லிமீட்டரும் மழை பதிவாகி உள்ளது. மாநகரில் மழை இல்லை. இன்றும் காலை முதலே வெயில் அடித்தது.

அணைகளை பொறுத்தவரை கடந்த 2 நாட்களாக மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டி அமைந்துள்ள பிரதான அணைகளான பாபநாசம், சேர்வலாறு, மணிமுத்தாறு நீர்பிடிப்பு பகுதிகளில் சாரல் மழை பெய்து வருகிறது.

143 அடி கொள்ளளவு கொண்ட பாபநாசம் அணை பகுதியில் நேற்று 13 மில்லிமீட்டர் மழை பெய்தது. அணைக்கு வினாடிக்கு 1,444 கனஅடி நீர் வந்து கொண்டிருக்கிறது. பாபநாசம் அணை நீர்மட்டம் நேற்று 1 அடி உயர்ந்த நிலையில் இன்று மேலும் 1½ அடி உயர்ந்துள்ளது. இன்று காலை நிலவரப்படி அணை நீர்மட்டம் 95 அடியை எட்டி உள்ளது. சேர்வலாறு அணை நீர்மட்டம் இன்று மேலும் 1 அடி உயர்ந்து 107.70 அடியை எட்டி உள்ளது. அந்த அணை பகுதியில் 11 மில்லிமீட்டர் மழை பெய்துள்ளது. மணிமுத்தாறு அணை நீர்மட்டம் 63.84 அடியாக உள்ளது.

களக்காடு தலையணையில் நீர்வரத்து குறைந்துள்ளதால் அங்கு சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இன்று விடுமுறை என்பதால் அகஸ்தியர் அருவி, மணிமுத்தாறு அருவிகளிலும் சுற்றுலா பயணிகள் கூட்டம் அதிகரித்துள்ளது.

தென்காசி மாவட்டத்தில் மேற்கு தொடர்ச்சி மலையையொட்டி அமைந்துள்ள தென்காசி, செங்கோட்டை பகுதிகளில் விட்டு விட்டு சாரல் மழை பெய்தது.

கருப்பாநதி அணைநீர்பிடிப்பு பகுதியில் 21 மில்லிமீட்டர் கனமழை பெய்தது. குண்டாறுஅணையில் 8 மில்லிமீட்டரும், கடனா அணையில் 6 மில்லிமீட்டரும் மழை பெய்துள்ளது.

தூத்துக்குடி மாவட்டத்தில் ஓட்டப்பிடாரம், கடம்பூர் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் கனமழை கொட்டியது. இதனால் அங்கு சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

அதிகபட்சமாக ஓட்டப்பிடாரத்தில் 38 மில்லிமீட்டரும், கடம்பூரில் 26 மில்லிமீட்டரும் மழை பதிவாகியது. கீழ அரசடி, விளாத்திகுளம், வைப்பார் பகுதிகளில் சாரல் மழை பெய்தது. கீழ அரசடியில் பெய்த 18 மில்லிமீட்டர் மழையால் வெப்பம்தணிந்துகுளிர்ச்சி நிலவியது.

# மாநாட்டுக்கு சென்ற தொண்டர்களுக்கு திருச்சியில் சுடச்சுட உணவு தயாரித்து வழங்கப்பட்டது



திருச்சி, அக். 29

விஜய் தொடங்கியுள்ள தமிழக வெற்றி கழகத்தின் முதல் மாநில மாநாடு இன்று விக்கிரவாண்டி வி.சாலை பகுதியில் நடைபெற உள்ளது. இதற்காக தேசிய நெடுஞ்சாலை அருகில் 85 ஏக்கர் பரப்பளவில் பிரமாண்டமானமாநாட்டு திடல் உருவாக்கப்பட்டு உள்ளது.

மாநாட்டிற்கு தமிழகம் மற்றும் கர்நாடக, கேரளா போன்றபகுதிகளில் இருந்தும் லட்சக்கணக்கான தொண்டர்கள், விஜய் ரசிகர்கள் திரண்டு வந்த வண்ணம் உள்ளனர். மேலும் தென்மாவட்டங்களில் இருந்து மாநாட்டிற்கு வாகனங்களில் செல்வோர் திருச்சி புறநகர் பகுதியில் ஓய்வெடுத்து செல்லவும், அவர்களுக்கு காலை உணவு வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. மேலும் அவர்களுக்கு மதிய உணவு பொட்டலங்களும் வழங்கப்பட்டன.

இதற்காக திருச்சி தெற்கு மாவட்ட இளைஞர் அணி தலைவர் வி.எல்.சீனிவாசன் தலைமையில் தொண்டர்கள், ரசிகர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தினர் இணைந்து 6 ஆயிரம் உணவு பொட்டலங்களை தயார் செய்தனர். புளி சாதம், எலுமிச்சை சாதம், தயிர் சாதம் உள்ளிட்டவை தயாரிக்கப்பட்டன. பின்பு அவை பொட்டலங்களாக கட்டப்பட்டு மாநாட்டுக்கு சென்ற தொண்டர்களுக்கு வழங்கப்பட்டது.

த.வெ.க. தொண்டர்கள் இணைந்து நடிகர் விஜய்க்காக தங்களது சொந்த பணத்தில் இந்த உணவை தாயார் செய்ததாக தெரிவித்தனர்.

இரவு முழுவதும் கண் விழித்து உணவு தயாரிக்கும் பணியில் ஈடுபட்டதாக வி.எல்.சீனிவாசன் தெரிவித்தார்.

# திசையன்விளையில் 20 வழக்குகளில் தொடர்புடைய `கஞ்சா' ராணி மீண்டும் கைது



திசையன்விளை,அக்.29

நெல்லை மாவட்டம் திசையன்விளையை சேர்ந்தவர் வேதமாணிக்கம். இவரது மனைவி செல்வராணி (வயது 57). இவர் சம்பவத்தன்று திசையன்விளை பொம்மிநகர் பகுதியில் நின்று கொண்டிருந்தார்.

அப்போது அந்தவழியாக ரோந்து சென்ற திசையன்விளை இன்ஸ்பெக்டர் சீதா லெட்சுமி தலைமையிலான போலீசார் செல்வராணியை சோதனை செய்தனர்.

அப்போது அவரிடம் இருந்த 200 கிராம் கஞ்சா மற்றும் விற்ற பணம் ரூ.500ஐ பறிமுதல் செய்தனர். தொடர்ந்து அவர் மீது வழக்குப்பதிவு செய்து கைது செய்தனர்.

கைதான செல்வராணி மீது கஞ்சா வழக்குகள் உள்பட 20க்கும் மேற்பட்ட வழக்குகள் நிலுவையில் உள்ளன. போலீசாரால் அடிக்கடி கைதாகி உள்ள செல்வராணி, தற்போது போலீசில் சிக்காமல் இருப்பதற்காக தனது இருப்பிடத்தை தூத்துக்குடி மாவட்டம் தாளமுத்து நகருக்கு மாற்றிவிட்டார்.

அங்கிருந்து அவ்வப்போது திசையன் விளைக்கு வந்து கஞ்சா சப்ளை செய்து வந்தது போலீஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

# இரவில் வீட்டுக்குள் புகுந்த திருடன்: முதியவரை பிடித்து மிரட்டல் விடுக்கும் காட்சி வைரல்



ஊட்டி, அக். 29

நீலகிரி மாவட்டம் பந்தலூர்அருகே இரவு நேரத்தில் வீட்டிற்குள் புகுந்த திருடன் முதியவரை பிடித்து வைத்துக் கொண்டு கொலை செய்துவிடுவதாக அக்கம் பக்கத்தினரை மிரட்டும் வீடியோ வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

நீலகிரி மாவட்டம் கூடலூரை அடுத்துள்ள கிராமத்தில் ஐயாமுத்து என்ற 86 வயதுடைய முதியவர், அவருடைய மனைவி லட்சுமி இருவரும் தனியாக வசித்து வருகின்றனர்.

திடீரென நேற்று இரவு அதேபகுதியை சேர்ந்த சந்திரன் என்பவர் வீட்டிற்குள் நுழைந்து திருட முயற்சித்துள்ளார். இதைக்கண்டு வீட்டில் இருந்தவர்கள் கூச்சலிட்டனர். அப்போது வயதானவரை தாக்கி மிரட்டல் விடுத்துள்ளார்.

உடனே அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் வந்ததும் முதியவரைகாப்பாற்றுவது போல் நடித்துள்ளர். அருகில் உள்ள பொருட்களை எடுத்து வீசியும், முதியவரின்கழுத்த பிடித்து இறுக்கியும் மிரட்டல் விடுத்தார்.

அருகில் இருந்தவர்கள் போலீசுக்கு தகவல் தெரிவித்ததும் சந்திரன் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டார். அவரை போலீசார் தேடி வருகின்றனர்.

தற்போதுபலத்தகாயம் அடைந்த முதியவர் பந்தலூர் அரசு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# தவெக மாநாட்டில் அனுமதியின்றி நுழைந்த தொண்டர்கள்.... வெளியேற்றும் பவுன்சர்கள்

விழுப்புரம், அக். 29

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டியில் உள்ள வி.சாலையில்தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் மாநாடு பிரம்மாண்டமாக இன்று மாலை 4 மணிக்கு நடைபெற உள்ளது.

மாநாட்டு திடலில் சுமார் ஒரு லட்சம் பேர் அமர்ந்து பார்க்கும் வகையில் இருக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், பிரம்மாண்டமாக காட்சி அளிக்கும் மாநாட்டு திடலில் அதிகாலை முதலே பல்வேறு பகுதிகளில் இருந்து தொண்டர்கள் குவிந்து வருகின்றனர்.

மாநாட்டு திடலில் பல்லாயிரக்கணக்கானோர் குவிந்ததால், 10 மணிக்கு மேல் திடலுக்குள் அனுமதிக்கப்பட இருந்த நிலையில், முன்கூட்டியே தொண்டர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

அப்போது, தவெக திடலில் முண்டியடித்துக் கொண்டு உள்ளே நுழைந்தனர். இதில், கடைசி 4 வரிசையில் இருந்த சேர்கள் உடைக்கப்பட்டுள்ளன. விஐபி சேர்கள், மகளிருக்கான இருக்கைகளையும் ஆண் தொண்டர்கள் ஆக்கிரமித்துள்ளனர். இந்நிலையில் தவெக மாநாட்டில் அனுமதியின்றி நுழைந்த தொண்டர்களைபவுன்சர்கள்வெளியேற்றி வருகின்றனர்.

# தீபாவளி சிறப்பு விற்பனை தொகுப்பு மற்றும் கூட்டுறவு பட்டாசு கடை விற்பனை: மாவட்ட கலெக்டர் தொடங்கி வைத்தார்



அரியலூர், அக். 29

அரியலூர் மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையின் கீழ் செயல்படும் அரியலூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் கட்டுப்பாட்டில் செயல்படும் அமராவதி2 நியாயவிலைக் கடையில் கூட்டுறவுக் கொண்டாட்டம் என்ற பெயரில் மளிகைப் பொருட்கள் அடங்கிய தீபாவளி சிறப்புத் தொகுப்பு விற்பனையினையும், கூட்டுறவு பட்டாசுக் கடை விற்பனையினையும் மாவட்ட கலெக்டர் பொ. இரத்தினசாமி துவக்கி வைத்தார்.

மேலும், முதியோர் ஓய்வூதிய திட்ட குடும்ப அட்டைதாரர்களுக்கு விலையில்லா வேட்டி மற்றும் சேலைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா கலந்துகொண்டார். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ஏழை, எளிய, நடுத்தர மக்கள் என அனைத்து தரப்பினரும் தீபாவளி பண்டிகையை கொண்டாடும் வகையில் கூட்டுறவு கொண்டாட்டம் என்ற பெயரில் கூட்டுறவு விற்பனை பண்டகசாலைகள் மூலம் மளிகை பொருட்கள் அடங்கிய தீபாவளி சிறப்பு விற்பனை தொகுப்பினை வாடிக்கையாளர்களுக்கு வழங்கி மாவட்ட கலெக்டர் விற்பனையை தொடங்கி வைத்தார்

இத்தீபாவளி சிறப்பு மளிகைத் தொகுப்பில் அதிரசம் முறுக்கு தொகுப்பில் 5 வகையான மளிகைப் பொருட்கள் ரூ.190க்கும். பிரீமியம் தொகுப்பில் 14 வகையான மளிகைப் பொருட்கள் ரூ.199க்கும் மற்றும் எலைட் தொகுப்பில் 14 வகையான மளிகைப் பொருட்கள் ரூயஅ.299க்கும் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

தீபாவளி சிறப்பு மளிகைத் தொகுப்புகள் நியாயவிலைக் கடைகளில் கிடைக்கும். எனவே, கூட்டுறவுத் துறையின், கூட்டுறவு விற்பனை பண்டகசாலைகள் மூலம் விற்பனை செய்யப்படும் கூட்டுறவு கொண்டாட்டம் தீபாவளி சிறப்புத் தொகுப்பு விற்பனையினை வாங்கி அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறலாம் என மாவட்ட கலெக்டர் பொ.இரத்தினசாமி, தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து, கூட்டுறவுத் துறையின் சார்பில் முதியோர் ஓய்வூதிய திட்டத்தில் உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு விலையில்லா வேட்டி மற்றும் சேலைகளையும் வழங்கினார். அதன்படி அரியலூர் மாவட்டத்தில் தீபாவளி பண்டிகையையொட்டி 30,065 முதியோர் ஓய்வுதிய திட்டத்தில் பயன் பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு விலையில்லா வேட்டி மற்றும் சேலைகள் நியாயவிலைக் கடைகள் மூலமாக வழங்கப்படுகிறது.

மேலும், அரியலூர் மாவட்டத்தில் அரியலூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை, காட்டுப்பிரிங்கியம், ஆண்டிமடம் மற்றும் உடையார்பாளையம் ஆகிய தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் கூட்டுறவு பட்டாசுக் கடைகளில் இன்று முதல் பட்டாசுகள் விற்பனை செய்யப்படுகிறது. இங்கு விற்பனை செய்யப்படும் தரமான பட்டாசுகளை நியாயமான விலையில் பெற்று பாதுகாப்பான முறையில் தீபாவளி பண்டிகையினை கொண்டாட கேட்டுக்கொள்ளப் படுகிறது.

இந்நிகழ்ச்சிகளில், கூட்டுறவுத்துறை மண்டல இணைப்பதிவாளர் தீபாசங்கரி, மாவட்ட வழங்கல் அலுவலர் ராமலிங்கம், துணைப்பதிவாளர் (பொ.வி.தி) இளஞ்செல்வி, கூட்டுறவு சார்பதிவாளர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# தூய்மை பணியாளர்கள் 500 பேருக்கு கிருஷ்ணகிரி நகர மன்ற தலைவர் சமூக ஆர்வலர் சொந்த செலவில் பட்டாசு இனிப்பு, புத்தாடைகளை வழங்கினார்



கிருஷ்ணகிரி, அக்,29

கிருஷ்ணகிரி நகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள் மற்றும் தனியார் தூய்மை பணியாளர்கள் என 500 பேருக்கு கிருஷ்ணகிரி நகர மன்ற தலைவர் சமூக ஆர்வலர் அன்புச் சகோதரி பரிதா நவாப் சொந்த செலவில் பட்டாசு இனிப்பு மற்றும் புத்தாடைகள் வழங்கி சிறப்பித்தார்கள் மேலும் நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி நகர கழக செயலாளர் எஸ் கே நவாப் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள் தொடர்ந்து நிகழ்ச்சியில் நகர மன்ற துணைத் தலைவர் மற்றும் நகர மன்ற உறுப்பினர்கள் நகராட்சி துப்புரவு அலுவலர் ராமகிருஷ்ணன் மற்றும் நகராட்சி அலுவலர்கள் நகராட்சி பணியாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர் மேலும் நிகழ்ச்சியில் வட்டக் கழகச் செயலாளர்கள் வட்டக் கழகப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர் நம்மைச் சுற்றி பாதுகாப்பு வளையமாக அரணாக இருந்து தூய்மை பணியை சிறப்பாக செய்கின்ற அந்த பணியாளர்களுக்கு புத்தாடைகள் இனிப்புகள் மற்றும் பட்டாசுகள் வழங்கி அதை ஏற்றுக்கொண்ட தூய்மை பணியாளர்கள் நெஞ்சார நகர மன்ற தலைவர் அன்பு சகோதரி பரிநாநவாப் அவர்களின் செயலை தாயுள்ளத்தோடு பாராட்டி சென்றார்கள்

# ஈரோடு மாவட்ட கலெக்டர் தலைமையில் அனைத்து துறை அலுவலர்களும் ஊழல் ஒழிப்பு விழிப்புணர்வு உறுதிமொழியினை ஏற்றுக் கொண்டனர்



ஈரோடு, அக். 29

ஈரோடு மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா தலைமையில் ஊழல் ஒழிப்பு விழிப்புணர்வு வாரம் (29.10.2024 முதல் 03.11.2024 வரை) கடைபிடிக்கப்படுவதை முன்னிட்டு, ஊழல் ஒழிப்பு விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் ஊழல் ஒழிப்பு விழிப்புணர்வு உறுதிமொழியான, நமது நாட்டின் பொருளாதாரம், அரசியல் மற்றும் சமூக முன்னேற்றத்திற்கு ஊழல் ஒரு முக்கியத் தடையாக உள்ளதாக நான் நம்புகிறேன். அரசு, குடிமக்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் ஆகியவை ஊழலை ஒழிக்க ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என நம்புகிறேன். நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் எப்போதும் உயர்ந்த நோக்குடன்,

விழிப்புணர்வு, நேர்மை, கண்ணியம் ஆகியவற்றுடன் ஊழலை ஒழிப்பதில் உறுதுணையாக விளங்க வேண்டும் என்பதை நான் நன்கறிவேன். எனவே நான், அனைத்து செயல்களிலும் நேர்மையையும், சட்ட விதிகளையும் பின்பற்றுவேன் என்றும், இலஞ்சம் வாங்கவோ அல்லது கொடுக்கவோ மாட்டேன் என்றும், அனைத்து செயல்களையும் நேர்மை மற்றும் வெளிப்படைத் தன்மையுடன் செயல்படுத்துவேன் என்றும், பொதுமக்களின் நலனுக்காக பணியாற்றுவேன் என்றும்,

தனிப்பட்ட நடத்தையில் நேர்மையை வெளிப்படுத்துவதில் ஒரு முன்னுதாரணமாக செயல்படுவேன் என்றும், ஊழல் தொடர்பான நிகழ்வினை உரிய அதிகார அமைப்பிற்கு தெரியப்படுத்துவேன் என்றும் உறுதி கூறுகிறேன் என்ற உறுதிமொழியினை மாவட்ட கலெக்டர் வாசிக்க அனைத்துத் துறை அலுவலர்களும் பின் தொடர்ந்து வாசித்து நேர்மை உறுதிமொழியினை ஏற்றுக் கொண்டனர்.

இந்த உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்தகுமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) முஹம்மது குதுரத்துல்லா, தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) செல்வராஜ், மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் புபதி உட்பட அனைத்து துறை அலுவலர்கள், பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# தென்காசியில் ஊழல் தடுப்பு உறுதிமொழி



தென்காசி, அக். 29

தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்ரீனிவாசன் தலைமையில் மாவட்ட காவல் அலுவலகத்தில் பணிபுரியும் காவல் அதிகாரிகள், காவல் ஆளினர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்கள் ஊழலை தடுக்கும் பொருட்டு அனைத்து செயல்களிலும் நேர்மையையும் சட்ட விதிகளையும் பின்பற்றுவேன், லஞ்சம் வாங்கவோ அல்லது கொடுக்கவோ மாட்டேன், அனைத்து செயல்களையும் நேர்மை மற்றும் வெளிப்படை தன்மையுடன் செயல்படுவேன், ஊழல் தொடர்பான நிகழ்வினை உரிய அதிகார அமைப்பிற்கு தெரியப்படுத்துவேன், பொதுமக்களின் நலனுக்காக பணியாற்றுவேன் என்றும் உறுதிமொழியை எடுத்துக் கொண்டனர். இதேபோல் மாவட்டத்திலுள்ள அனைத்து காவல் நிலையங்களிலும் உறுதிமொழி எடுக்கப்பட்டது.

# துபாய் கப்பலில் ப்ரோமோஷன் பணிகளில் ஈடுப்பட்ட பிரதர் படக்குழு



எம்.ராஜேஷ் இயக்கத்தில் ஜெயம் ரவி நடிப்பில் உருவாகியுள்ள படம் பிரதர்.

பிரியங்கா மோகன் பூமிகா, சரண்யா, பொன்வண்ணன், நட்டி உள்பட பலர் படத்தில் நடித்துள்ளனர்.

அக்காதம்பி உறவை மையமாக கொண்டு உருவாகியுள்ள இந்தப் படம் தீபாவளி பண்டிகையையொட்டி திரைக்கு வர இருக்கிறது. இத்திரைப்படம் மீது ரசிகர்களுக்கு பெரும் எதிர்ப்பார்ப்பு இருக்கிறது. இத்திரைப்படம் ஜெயம் ரவிக்கு வெற்றி திரைப்படமாக அமையும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

இதையொட்டி படத்தின் புரமோஷன் பணிகள் பல்வேறு இடங்களில் நடந்து வந்த நிலையில் தற்போது துபாய் சொகுசு கப்பலில் இந்த படத்தின் விழா நடைபெற்றுள்ளது. விழாவில் ஜெயம் ரவி, பிரியங்கா மோகன் உள்பட பட குழுவினர் பங்கேற்றனர்.

பிரதர் படத்திற்கு அடுத்ததாக ஜினி, காதலிக்க நேரமில்லை, உள்பட சில புதியபடங்களில் ஜெயம் ரவி நடித்துள்ளார்.

# BGMகளை பதிவேற்ற youtube சேனல் தொடங்கிய இசைஞானி



இந்தியாவின் சிறந்த திரைப்பட இசையமைப்பாளர்களுளில் ஒருவர் இளையராஜா. இவர் 'அன்னக்கிளி' என்ற திரைப்படத்துக்கு இசை அமைத்ததன் மூலம் 1976ம் ஆண்டு தமிழ் சினிமாவிற்கு அறிமுகமானார். இதுவரை 1000க்கும் மேற்பட்ட தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி உள்ளிட்ட திரைப்படங்களுக்கு இசையமைத்துள்ளார்.

இசைஞானி என ரசிகர்களால் கொண்டாடப்படும் இளையராஜா, சில மாதங்களுக்கு முன் சிம்பொனி இசையை 35 நாட்களில் எழுதி முடித்ததாகக் கூறி அனைவரையும் ஆச்சரியப்படுத்தினார். தொடர்ந்து, அவரது இசையமைப்பில் வெளியான 'ஜமா' திரைப்படம் ரசிகர்களிடம் வரவேற்பைப் பெற்றது. மேலும், சமீப காலமாக வெளியாகும் பல திரைப்படங்களில் இளையராஜா இசையமைத்த பழைய பாடல்கள் பயன்படுத்தப்படுகின்றன. இதனிடையே இசைக் கச்சேரிகளையும் தொடர்ந்து நடத்தி வருகிறார்.

இந்நிலையில், தான் இசையமைத்த திரைப்படங்களில் இடம்பெற்ற பின்னணி இசைகளை பதிவேற்ற அதிகாரப்பூர்வ யூடியூப் சேனலை தொடங்கியுள்ளதாக இளையராஜா தெரிவித்துள்ளார். சேனலுக்கு 'இளையராஜா பிஜிஎம்'எஸ் எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இளையராஜா தனது சமூக வலைதள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "பின்னணி இசைக்கான எனது அதிகாரபூர்வ யூடியூப் சேனலை அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். எனது பாடல்கள் உங்களை ஆட்கொண்டதை போல, இந்த பின்னணி இசையும் உங்களின் கேட்கும் அனுபவத்தை மேம்படுத்தும் என நம்புகிறேன். ஒவ்வொரு இசைக்குறிப்பும் ஒரு கதையை சொல்லும் இந்த இசைப் பயணத்தை ஒன்றாக தொடங்குவோம்" என அவர் தெரிவித்துள்ளார்.

# யார் வெறுப்பை விதைத்தாலும் நாம் அன்பை மட்டும் பரிமாறுவோம்: நடிகர் சூர்யா



கங்குவா திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழா சென்னையில் மிக பிரம்மாண்டமாக நடைபெற்றது. திரைத்துறையில் உள்ள பலரும், படத்தில் நடித்த நடிகர்களும் இவ்விழாவில் பங்கேற்றுள்ளனர்.

இந்த விழாவில் நடிகர் சூர்யா பேசியதாவது:

என்ன வெறுப்பை விதைத்தாலும் நாம் அன்பை மட்டுமே பரிமாறுவோம்.

வீட்டில் உள்ள அத்தனை பெண்களுக்கும் நன்றி.

சூரியன் மேலே இருந்தால் ஒரு புதிய விடியல் கிடைத்திருக்காது.

ரசிகர்களாகிய உங்களின் அன்பு எனக்கு விலைமதிப்பில்லாதது.

வில்லில் அம்பு பின்னால் சென்றால் தான் நினைத்த இலக்கை அடைய முடியும். அன்பாக இருப்போம், நல்லதையே செய்வோம். உன் ரத்தமும், என் ரத்தமும் வேறு வேறல்ல. எனது நண்பரின் புதிய பாதைக்கு நல்வரவு என தெரிவித்தார்.

# புரோ கபடி லீக்: போராடி டிரா செய்த தமிழ் தலைவாஸ்



11வது புரோ கபடி லீக் போட்டி இந்தியாவில் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், இந்த தொடரில் இன்று நடைபெற்ற முதல் லீக் ஆட்டத்தில் தமிழ் தலைப்வாஸ், ஜெய்ப்பூர் பிங்க் பாந்தர்ஸ் அணிகள் மோதின.

தொடக்கம் முதலே இரு அணிகளும் சிறப்பாக ஆடின. ஒரு கட்டத்தில் ஜெய்ப்பூர் அணி அதிக புள்ளிகள் வித்தியாசத்தில் முன்னிலையில் இருந்தது.

தோல்வி நிலையில் இருந்த தமிழ் தலைவாஸ் அணி கடைசி கட்டத்தில் போராடியது.

இறுதியில், தமிழ் தலைவாஸ், ஜெய்ப்பூர் பிங்க் பாந்தர்ஸ் இடையிலான போட்டி 3030 என சமனில் சமனில் முடிந்தது.

மற்றொரு போட்டியில் யுபி யோதாஸ் 3529 என்ற புள்ளிக்கணக்கில் குஜராத் ஜெயண்ட்ஸ் அணியை வீழ்த்தி இரண்டாவது வெற்றியைப் பதிவு செய்தது.

# ஜப்பான் ஓபன் டென்னிஸ்: சாம்பியன் பட்டம் வென்றார் சீன வீராங்கனை



ஜப்பான் ஓபன் டென்னிஸ் தொடர் ஜப்பானில் நடைபெற்றது. இதில் பெண்களுக்கான ஒற்றையர் பிரிவு இறுதிச்சுற்றில் அமெரிக்காவின் சோபியா கெனின், சீன வீராங்கனை குயின்வென் ஜெங் உடன் மோதினார்.

இதில் குயின்வென் ஜெங் 7-6 (7-5), 6-3 என்ற நேர் செட் கணக்கில் வென்று சாம்பியன் பட்டம் வென்றார். ஏற்கனவே இவர் பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் தங்கப்பதக்கம் வென்றவர்என்பது குறிப்பிடத்தக்கது.

# 6 தோல்வி என கேப்டனை கிண்டலடித்த ரமீஷ் ராஜா மீது நடவடிக்கை?



இங்கிலாந்து அணி பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியது. இதில் முதல் டெஸ்ட் போட்டியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி அடுத்த 2 டெஸ்ட் போட்டிகளில் தோல்வியடைந்தது. இதனால் பாகிஸ்தான் 21 என்ற கணக்கில் தொடரை வென்று தொடர் தோல்விக்கு பதிலடி கொடுத்தது.

இந்நிலையில் போட்டி முடிந்த பின் வர்ணனையாளருடன் பாகிஸ்தான் அணியின் கேப்டன் ஷான் மசூத் உரையாடினார். அப்போது பாகிஸ்தான் கேப்டன் ஷான் மசூத்தை நேர்காணல் செய்யும் போது முன்னாள் பிசிபி தலைவரும் வர்ணனையாளருமான ரமீஷ் ராஜா கேலி செய்தார். இதனால் அவர் மீது நடவடிக்கை எடுக்க வாய்ப்புள்ளது.

இங்கிலாந்துக்கு எதிரான பாகிஸ்தான் தொடரை வென்றதைத் தொடர்ந்து, ரமிஸ் ஷானிடம், "தொடர்ந்து ஆறு தோல்விகளை எப்படி அடைந்தீர்கள்?" இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கு முன் மசூத்தின் சாதனையை குறிப்பிடுகிறார். ஷான் மசூத் தலைமையில் பாகிஸ்தான் தொடர்ந்து 6 தோல்விகளை தழுவியது.

**NAMADHU DHINA KANI**
**Canara Bank**
**Account: 120028528266**
**IFSC code: CNRB0001041**

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.